# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

## அசல் வழக்கு எண். 41/2022

## நாள்: 04.08.2026

**பெயர் : M.S. மணியன்**
**தந்தை/கணவர் பெயர்: மாரிமுத்து**
**PW: 1**

(இடை மனு 7/2025 அனுமதிக்கப்பட்டு 10.04.2026 தேதியிட்ட உத்தரவின் படி வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் வாதி என் முதல் விசாரணையின் தொடர்ச்சிக்கு இணையாக கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் சொல்லி தயாரிக்கப்பட்டு அதை படித்து பார்த்து விவரங்களை தெரிந்து கொண்டு கையெழுத்திட்டுள்ளேன். என் தரப்பில் கூடுதலாக மூன்று ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். 2021 முதல் 2022 வரி விதிப்பு ஆண்டுக்கான என் வருமான வரி கணக்கு தாக்கல் செய்து ஒப்புதல் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது மற்றும் ஸ்டெட்மண்ட் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.10** ஆக குறியிடப்படுகிறது. நான் 1ம் பிரதிவாதியின் மகன் சரணவனுக்கு கொடுத்த காசோலை புகைப்பட நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியிடப்படுகிறது. 01.08.2020 முதல் 31.08.2020 வரையிலான என் வங்கி கணக்கு ஸ்டெட்மண்ட் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியிடப்படுகிறது.

ஒப்பம்/- **M.S. மணியன்**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.